திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த காச நோயால் பலர் பாதிக்கப்பட்டு அந்த நோயாளிகள் இடம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த பெருந்துறை டி.பி. ஸானிட்டோரியத்தை அரசாங்கமே ஏற்று நடத்துவது உதவிகரமாகயிருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அது நடந்து வருகிற முறையில் ஒன்றும் கேடு இல்லை. நல்ல முறையில்தான் அந்த ஸானிட்டோரியத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதிகமாகச் செலவாகிறது, துண்டு விழுகிறது என்ற காரணத்தினால் அரசாங்கம் கூடுதல் மானியம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு லட்சம் ரூபாய் மானியம் தருகிறபோது அவ்வகையில் கொஞ்சம் படுக்கைகளைக்கூட்ட முடியும் என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். அதுதான் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. சு. துரைசாமி: இலவசப் படுக்கைகள் அதிகமாக வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டு ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வியாதி கடுமையாக இருக்கிறவர்களுக்கு உடனடியாகப் படுக்கைகள் கொடுப்பதற்காக சிறிது அதிகம் படுக்கைகளை உயர்த்தவேண்டுமென்று அரசாங்கம அவர்களுக்கு ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: காச நோயைப் பொறுத்த வரையில் வீட்டிலிருந்தே பார்த்துக் கொள்வதற்கு ஏற்ற முறையில் பலவித மருந்துகள், மற்ற வகைகளை எல்லாம் இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார்கள். மிகக் கடுமையான அளவிற்குள்ள நோயாளிகளைத்தான் ஆஸ்பத்திரிகளில் வைத்துக் கவனிக்க வேண்டிய முறை உள்ளது. நிதி வசதிக்கேற்ற முறையில்தான் படுக்கைகளை கூட்டி வருகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே நிதி வசதி ஏற்படும்போது அதுபற்றிக் கவனிக்கலாம்.

தேசிய மாணவர் படை செலவில் மத்திய அரசின் பங்கு

*264 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.சி.சி. மாணவர்களுக்காக செலவழிக்கப்படும் தொகையில் மத்திய அரசு பங்கேற்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இந்திய அரசு இராணுவ அதிகாரிகள், போதகர்கள், படைக் கருவிகள், வெடிமருந்துகள், மாணவர்கள் சீருடை, இளநிலைப் பகுதி (ஆண், பெண்) அதிகாரிகள் சீருடை, இராணுவ ஊர்திகள், பயிற்சிச் சாதனங்கள் ஆகியவற்றைத் தருகிறது. பயிற்சி முகாமுக்கு ஏற்படும் செலவில் 50 சத விதத்தையும் மத்திய அரசு மாநில அரசுக்கு ஈடு செய்கிறது

திரு. என். கிட்டப்பா: தமிழ்நாட்டில் என்.சி.சி. மாணவர்களுக்காக செவழிக்கப்படும் முழுத் தொகையையும் மத்திய அரசிடம் கோரிப் பெற நமது தமிழக அரசாங்கம் முன்வருமா?

1970 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பெரும் பகுதியை அவர்கள் தான் ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு பகுதியை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு முடிவிற்கிணங்க ஒரு பகுதியை மட்டும் மாநில அரசு ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் மைய சமயற்கூடம்

*265 **வினா—திரு. இரா. மாணிக்கவாசகம்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வட்டம், பெரியநாயக்கன் பாளையம் பகுதியில் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் மத்திய உணவு வழங்கு நிலையம் ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

(இ) இத்திட்டத்தை விரைவுபடுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) &(இ) பெரியநாயக்கன் பாளையத்தில் மத்திய உணவு வழங்கு நிலையம் ஏற்படுத்தும் திட்டம் தற்போது இல்லை. எனினும் நிதிநிலை வசதிக்கேற்ப, 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் படிப்படியாக ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் மத்திய உணவு வழங்கு நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் 'கேர்' உணவுத் திட்டத்தின்கீழ் மையச் சமையற்கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோவை மாவட்டத்தில் முதன்முறையாக ஐந்தாறு வட்டங்களிலாவது அப்படிப்பட்ட மையச் சமையற்கூடங்கள் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முன்பே ஒரு கேள்விக்கு விடையளிக்கும்போது இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். 'கேர்' நிறுவனம் மாவட்டம் மாவட்டமாக எடுத்துக்கொள்கிற திட்டத்தைத்தான் வகுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு வரையில் அப்படி 31 கூடங்கள் கட்டி முடிக்கப்பெற்று 70 அக்டோபரிலிருந்து 71 செப்டம்பர் வரையில் 66 கூடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லும்போது அப்படிக் கட்டுவதற்கு ஏற்ற முறையில் சாமான்கள், போக்குவரத்து தன்மை ஆகியவற்றையெல்லாம் பார்க்கும்போது இப்போதுள்ள முறையில் சென்றால்தான் அதிகச் செலவு இல்லாத வகையில் முடியும் என்று அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஒன்றிரண்டு ஆண்டுக் காலத்திற்குள் 374 ஒன்றியங்களிலும் இத்திட்டத்தை நிறைவேற்றுகிற முறையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வசதிகள் அடிப்படையில் திட்டத்தை நிறைவேற்றவேண்டியிருக்கிறது. இன்னும் இரண்டொரு ஆண்டுக் காலத்தில் கோவை மாவட்டத்திற்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படலாம் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: இப்போது மாநில நிதியில் செலவழிப்பதற்கு நிதிவசதி இல்லாவிட்டாலும் கோவாப்பரேட்டிவ் நிறுவனங்கள் இருக்கின்றன அவற்றில் 'மாமன் குட் பண்ட்ஸ்' இருக்கின்றன. நிதி உதவி அளிக்கத் தக்க வகையில் உள்ள பஞ்சாயத்து ஒன்றியங்களும் உள்ளன. பலதாப்பட்ட இன்ஸ்டிட்யூஷன்ஸ் இவற்றிற்கு உதவுவதற்கான நிலைகளும் இருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் பயன்படுத்தி இத்திட்டத்தை நிறைவேற்றக்கூடிய செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதா?